**DEPOSITION OF WITNESSES**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI**

**C.C. No: 5/2017**

**Deposition of Witnesses for PW3**

| | | | |
|---|---|---|---|
| Name | : | திரு.மோகன் | Caste: |
| Father's Name | : | | Calling: |
| Village | : | | Religion: |
| Taluk | : | | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 14.05.2025

**எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. அரசு வழக்கறிஞர் மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞரும் ஆஜர்.**

முதல் விசாரணை

நான் தற்போது ராமநாதபுரம் நகர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 11.12.2015ம் தேதி கேணிக்கரை காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்தபோது அங்கு தேவிப்பட்டிணம் காவல் ஆய்வாளர் பொறுப்பு கேணிக்கரை காவல் நிலையம் தலைமையில் நானும், சார்பு ஆய்வாளர் கணேசலிங்க பாண்டியன், மு.நி.கா.ரவிசந்திரன், ஆகியோருடன் பட்டிணம் காத்தான் செக்போஸ்ட் வாகன சோதனை செய்தபோது ராமேஸ்வரத்திலிருந்து ராமநாதபுரத்தை நோக்கி வந்த வாகனம் டி.என்.65 டு 0068 என்ற டாடா மான்ஸ்டா என்ற வாகனத்தில் பக்கத்தில் வந்தவர் போலீஸ் கண்டவுடன் வண்டியை நிறுத்திவிட்டு இறங்கி ஓடினார். அருகில் உள்ள சுவற்றில் ஏறும்போது இரண்டு கால்களிலும் அடிப்பட்டு கீழே விழுந்து விட்டார். அவரை செக்போஸ்ட் கொண்டு வந்து விசாரித்தபோது தன் பெயர் செல்வக்குமார், த/பெ.ராமு, ராமேஸ்வரம் என்று கூறினார். வாகனத்தை சோதனை செய்தபோது பின்புற சீட்டில் பேப்பரில் சுற்றப்பட்ட கஞ்சா அதை எடை போட்டு பார்த்தபோது 5 கிலோ கஞ்சா, 7 செல்போன்கள், ரூ.14,500/- பணம் ஆகியவற்றை கைப்பற்றினோம். செக்போஸ்ட்டில் விஏஓ, தலையாரி முன்னிலையில் சோதனை செய்தோம். அவரிடம் விசாரித்து அவரை மருத்துவமனைக்கு அழைத்து சென்று மருத்துவ சிகிச்சை செய்து கொண்டு வந்தோம். எதிரி மற்றும் சொத்துகளுடன் நிலையம் வந்து வழக்கு பதிவு செய்ய ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

இந்த வழக்கு சம்பந்தமாக நான் எந்த ஆவணத்திலும் கையெழுத்து செய்யவில்லை. நான் எந்த ஆவணங்களையும் எழுதவில்லை என்றால் சரிதான். என்னை ஆய்வாளர் விசாரித்தபோது நான் என்ன வேலை செய்தேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் எந்தெந்த ஆவணங்களை தயார் செய்தார்களா என்றால் அது பற்றி ஞாபகம் இல்லை. நான் முதல் விசாரணை சொன்ன சங்கதிகளை தான் ஆய்வாளர் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ரூ.14,500/- பணத்திற்கான டினாமினேசன் தெரியுமா என்றால் தெரியாது. எதிரி ஏறிகுதித்த காம்பவுண்ட் யாருக்கு சொந்தமானது என்று எனக்கு தெரியாது. நான் சொல்லும் நேரத்தில் சொல்லும் விதத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றும் எதிரிகளிடமிருந்து எந்த பொருளும் கைப்பற்றவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரி காம்பவுண்ட் ஏறி குதித்ததால் தான் காயம் ஏற்பட்டது என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல.மேலதிகாரிக்கு கேட்டுக்கொண்டதற்கிணங்க உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court
read over to the witnesses and
admitted by him / her to be correct.

Addl. District Judge/ Presiding Officer,
Spl. Court for EC/NDPS Act case,
Pudukkottai.